Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளி, செப்டம்பர் 27, 2024 | இதழ் 167

# மீண்டும் அமைச்சராகிறார் செந்தில் பாலாஜி

## வாரத்தில் 2 நாட்கள் அமலாக்கத்துறையில் கையெழுத்து ரூ.25 லட்சத்துக்கு 2 பேர்

## உத்தரவாதம் 471 நாட்கள் சட்டப் போராட்டம் நிபந்தனை ஜாமீன்: சுப்ரீம் கோர்ட் உத்தரவு

சென்னை, 27 செப் 2024: 471 நாட்கள் சட்டப் போராட்டத்திற்கு பின் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கி இன்று சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு போக்குவரத்து துறையில் வேலை வாங்கி தருவதாக பண மோசடி செய்த விவகாரம் தொடர்பாக அமலாக்கத் துறை பதிவு செய்த வழக்கில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி கடந்த ஆண்டு (2023) ஜூன் மாதம் 14-ந்தேதி கைது செய்யப்பட்டார்.

தற்போது அவர் புழல் சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார். இந்த வழக்கில் செந்தில் பாலாஜியின் சார்பில் வக்கீல் ராம் சங்கர் ஜாமின் கேட்டு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் அபய் எஸ்.ஒகா, ஏ.ஜி.மாசி ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்து கடந்த ஆகஸ்டு மாதம் 20-ந் தேதி, தேதி குறிப்பிடாமல் தள்ளி வைத்தனர்.





செந்தில் பாலாஜிக்கு ஜாமின் வழங்க அமலாக்கத்துறை கடும் எதிர்ப்பை தெரிவித்து இருந்தது. செந்தில் பாலாஜியின் உடல் நிலையை கருத்தில் கொண்டும், ஓராண்டுக்கும் மேலாக சிறையில் இருப்பதாலும் ஜாமின் வழங்க வேண்டும் என்று செந்தில் பாலாஜி தரப்பு கோரிக்கை வைத்து இருந்தது.

செந்தில் பாலாஜி வழக்கில் விசாரணை முடிந்து 37 நாட்களுக்கு பிறகு நீதிபதிகள் இன்று தீர்ப்பளித்தனர். சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் அபய் எஸ்.ஒகா மற்றும் ஏ.ஜி.மாசி ஆகியோர் தீர்ப்பளித்தனர்.

முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு ஜாமின் வழங்கி உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. 471 நாட்களுக்கு பின் அவருக்கு ஜாமின் கிடைத்துள்ளது.




சுப்ரீம் கோர்ட் விதித்துள்ள நிபந்தனைகள் வருமாறு:

திங்கள் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் அமலாக்கத் துறை அலுவலகத்தில் செந்தில் பாலாஜி ஆஜராகி கையெழுத்திட வேண்டும்.

சாட்சிகளை கலைக்கவோ, அவர்களை சந்தித்துப் பேசவோ எவ்வித முயற்சியும் மேற்கொள்ளக்கூடாது.

இந்த வழக்கில் செந்தில் பாலாஜி விசாரணை கைதியாகவே இருப்பதால், அவருடைய அடிப்படை உரிமையைக் கருத்தில் கொண்டு நிபந்தனை ஜாமீன் வழங்கப்படுகிறது.

ரூ.25 லட்சத்துக்கு இருநபர் உத்தரவாதம் வழங்க வேண்டும்.

விசாரணை நீதிமன்றத்தில் இந்த வழக்கு தொடர்ந்து நடைபெற ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடாது, என்பது உள்ளிட்ட நிபந்தனைகளை விதித்து செந்தில் பாலாஜிக்கு சுப்ரீம் கோர்ட் ஜாமீன் வழங்கியுள்ளது.

முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு சுப்ரீம் கோர்ட் நிபந்தனைகளுடன் ஜாமீன் வழங்கியதைத் தொடர்ந்து, புழல் சிறையின் வெளியே திமுகவினர் பட்டாசு வெடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அதேபோல், கரூரிலும் செந்தில் பாலாஜி ஆதரவாளர்கள் பட்டாசுகளை வெடித்து கொண்டாடினர்.

செந்தில் பாலாஜி தரப்பு வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

அமலாக்கத்துறை தொடர்ந்த வழக்கில், அண்மையில் ஜாமீன் வழங்கப்பட்ட டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலுக்கும், தமிழக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கும் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் வெவ்வேறானவை. எனவே, செந்தில் பாலாஜி சட்டபூர்வமாக அமைச்சராவதற்கு எந்த தடையும் இல்லை.

இந்த வழக்கை விசாரித்து முடிப்பதற்கு ஏற்படும் காலதாமதம், நீண்ட நாட்களாக செந்தில் பாலாஜி சிறையில் இருந்து வருவது, இந்த இரண்டு காரணங்களையும் அடிப்படையாக கொண்டுதான், உச்ச நீதிமன்றம் தற்போது ஜாமீன் வழங்கியுள்ளது, என்று கூறினார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# பீகாருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்படாது: மத்திய அமைச்சர் திட்டவட்டம்



சென்னை, 27 செப் 2024: பீகாருக்கு மாநில சிறப்பு அந்தஸ்து வழங்கப்படாது என்று நிதி அயோக் முடிவெடுத்துள்ளதாக மத்திய அமைச்சர் ஜித்தன் ராம் மாஞ்சி தெரிவித்துள்ளார்.

இருப்பினும், பிகாரின் மீது பிரதமர் மோடி தனிக் கவனம் செலுத்தி வருவதாகவும், எந்த





காரணத்துக்காகவும் மாநிலத்தின் வளர்ச்சி தடைபடாது என்றும் அவர் தெரிவித்தார்.

பீகார் மாநிலம் பாட்னாவில் தனது 80வது பிறந்த நாளை மத்திய அமைச்சர் ஜித்தன் ராம் மாஞ்சி நேற்று கொண்டாடினார். அப்போது செய்தியாளர்களை சந்தித்து அவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து ஜித்தன் ராம் பேசியதாவது:

"சிறப்பு அந்தஸ்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கை எழுப்புவது பெரிய விஷயம் அல்ல. ஆனால், கடைசி நிதிநிலை அறிக்கையில் மாநிலத்துக்கு எவ்வளவு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன என்பதை பார்க்க வேண்டும். ரூ. 300 கோடிக்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பீகார் மீது பிரதமர் மோடி சிறப்பு கவனம் செலுத்தி வருகிறார். எந்த மாநிலத்துக்கும் சிறப்பு அந்தஸ்து வழங்க மாட்டோம் என்று நிதி ஆயோக் ஏற்கெனவே முடிவெடுத்துள்ளது. பிகாரின் வளர்ச்சி எந்த சூழலிலும் நின்றுவிடப் போவதில்லை" எனத் தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள முக்கிய கூட்டணிக் கட்சியான ஜனதா தளத்தின் தலைவர் நிதீஷ் குமார், மத்திய அரசிடம் பிகாருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்க கோரினார். கடந்த ஜூலை 22ம் தேதி, மத்திய நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில், சிறப்பு அந்தஸ்து வழங்க முடியாது என்று கூறினார். அமைச்சகங்களுக்கு இடையேயான குழுவின் 2012ம் ஆண்டு அறிக்கையின்படி பிகாருக்கு வழங்க முடியாது எனக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

# வேலூர் மாவட்ட மலைப்பகுதிகளில் 5 லட்சம் விதை பந்துகள் தூவும் திட்டம்: கலெக்டர் சுப்புலெட்சுமி துவக்கி வைத்தார்



சென்னை, 27 செப் 2024: வேலூர் மாவட்டத்தில் மலைப்பகுதிகளில் பசுமை பரப்பை அதிகரிக்கும் வகையில் 5 லட்சம் விதை பந்துகளை தூவும் வகையில் மாவட்ட கலெக்டர் வே. இரா.சுப்புலெட்சுமி தீர்த்தகிரி மலைப்பகுதியில் விதை பந்துகளை தூவி தொடங்கி வைத்தார்.

அதன் அடிப்படையில் சமூக ஆர்வலர்களுடன் இணைந்து கடந்த மூன்று மாதங்களாக திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலையில் இருந்து 200-300 வருட பழமையான மரங்களில் இருந்து விழுந்த நாட்டு ரக விதைகள் 5 லட்சம் சேகரிக்கப்பட்டது. நீர் மருது, தான்றி, நாவல், அத்தி, அரசன், வேப்பம், சந்தனம் போன்ற மரங்கள் மலைகளில் பெரும்பாலும் வளரக்கூடியவை. வேலூர் மலைகளில் மரங்களை நட்டு வளர்த்தால் பசுமையான சூழல் ஏற்பட்டு மழை பொழிவை உண்டாக்கி, வெட்பம் குறையவும் வாய்ப்பு ஏற்படும்.

கடந்த 10.09.2024 அன்று காட்பாடி ஆக்சிலியம் கல்லூரியில் சேகரிக்கப்பட்ட 5 இலட்சம் விதைகளை கொண்டு 5 லட்சம் விதைப்பந்துகளை தயாரிக்க 3000 மாணவிகளை ஈடுபடுத்தி ஒரே நாளில் தயாரித்ததை கலெக்டர் பார்வையிட்டு, விதைப்பந்துகள் தயாரிக்கப்பட்டது. மேலும் தயாரித்த இந்த 5 இலட்சம் விதைப்பந்துகளை வேலூர் மாவட்டத்தில் உள்ள மலைகளில் தூவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி வேலூர் மாவட்டத்தில் உள்ள வேலூர் தீர்த்தகிரி மலை, தொரப்பாடி மலை, குடியாத்தம் உள்ளி மலை, கீ. வ. குப்பம் வடுகந்தாங்கல் முருகர் மலை ஆகிய இடங்களில் தலா 25,000 விதைப்பந்துகள் வீதம் ஒரு நாளில் 1 இலட்சம் விதை பந்துகள் ஊரக வளர்ச்சி துறை, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் தன்னார்வலர்களின் உதவியோடு தூவப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் ப. கார்த்திகேயன், அமுலு விஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மண்டலக்குழுத் தலைவர்கள் நரேந்திரன், யூசுப்கான், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் நீ. செந்தில்குமரன், மாநகராட்சி ஆணையாளர் ஜானகி ரவீந்திரன், வருவாய் கோட்டாட்சியர்கள் பாலசுப்பிரமணி (வேலூர்), செல்வி சுபலட்சுமி (குடியாத்தம்), குடியாத்தம் ஒன்றியக்குழுத்தலைவர் சத்தியானந்தம், கீ.வ.குப்பம் ஒன்றியக் குழுத் துணைத்தலைவர் வி. பாரதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நந்தகுமார், வினோத்குமார், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் சுமதி, வெங்கடாபுரம் ஊராட்சி மன்ற தலைவர் பாபு, சமூக ஆர்வலர் தினேஷ் சரவணன் மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# மருந்து தரநிலை சோதனையில் புகழ்பெற்ற 53 மாத்திரைகள் தோல்வி இந்திய மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு தகவல்




சென்னை, 27 செப் 2024: பாரசிட்டமால் உள்ளிட்ட பல மாத்திரைகள், மருந்து தரநிலை சோதனையில் தோல்வியடைந்துள்ளதாக இந்திய மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

புகழ்பெற்ற பல மாத்திரைகள் தரநிலை சோதனையில் தோல்வி அடைந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உடல் வலியிலிருந்து காய்ச்சல் வரை பலர் பாரசிட்டமலைதான் பயன்படுத்து வார்கள். மருத்துவமனைக்கு செல்லாமலேயே மருந்துக் கடையில் பாரசிட்டமல் மட்டும் வாங்கிப் பயன்படுத்துவார்கள். அந்த அளவிற்கு கண்மூடித்தனமான நம்பிக்கை சில மாத்திரைகள் மீது மக்களுக்கு உண்டு.

இந்த நிலையில், மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பின் இந்த மாதத்துக்கான மருந்துகள் எச்சரிக்கை வரிசையில் 53 மாத்திரைகள் சரியான தரத்தில் இல்லை என எச்சரித்துள்ளது. இந்த என்எஸ்கியூ என்பது அரசு மருந்து அதிகாரிகள் மாதாமாதம் தோராயமாக சில மாத்திரைகளைத் தேர்ந்தெடுத்து அதன் தரத்தை சோதனை செய்வார்கள்.

அந்த வகையில் இந்த முறை கால்சியம், விட்டமின் டி3 மாத்திரைகள், நீரிழிவு நோய் மாத்திரைகள், இரத்த உயர் அழுத்த மாத்திரைகள் உள்பட 50-க்கும் மேற்பட்ட மாத்திரைகளை சோதனை செய்ததில், தரச் சோதனையில் தோல்வியடைந்த விஷயம் வெளிவந்துள்ளது.

ஷெல்கால் வைட்டமின் சி மற்றும் டி3 மாத்திரைகள், வைட்டமின் பி காம்ப்ளக்ஸ் மற்றும் வைட்டமின் சி சாப்ட்ஜெல்ஸ், ஆன்டிஆசிட் பான்-டி, பாரசிட்டமல் ஐபி 500 மி.கி மாத்திரைகள், கிளிம்பிரைடு நீரிழிவு எதிர்ப்பு மருந்து, டெல்மிசார்டன் உயர் இரத்த அழுத்த மருந்து மற்றும் பல அதிகம் விற்பனையாகும் மருந்துகள், மருந்து கட்டுப்பாட்டாளரின் தரச் சோதனையில் தோல்வியடைந்தது.

இந்த மருந்துகள், ஹெட்டோரோ மருந்துகள், அல்கெம் ஆய்வகங்கள், ஹிந்துஸ்தான் ஆன்டிபயாடிக்ஸ் லிமிடெட், கர்நாடக ஆண்டிபயாடிக்ஸ் & பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட், மெக் லைஃப் சயின்சஸ், ப்யூர் & க்யூர் ஹெல்த்கேர் உள்ளிட்ட நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இதேபோல் கடந்த ஆகஸ்ட் மாதம் சுமார் 156 மருந்துகள் தர சோதனையில் தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

# போலி ஆவணங்களைப் பயன்படுத்தி அரசுக்கு சொந்தமான நிலம், நீர்நிலைகளை ஆக்கிரமித்தால் கிரிமினல் வழக்கு: கலெக்டர்களுக்கு தமிழக அரசு உத்தரவு

சென்னை, 27 செப் 2024: போலி ஆவணங்களை பயன்படுத்தி நீர்நிலைகள், பொது இடங்களில் அரசு நிலத்தை அபகரித்தால் கிரிமினல் வழக்கு தொடர வேண்டும் என்று மாவட்ட கலெக்டர்களுக்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் அரசுக்கு சொந்தமான நிலங்களையும், நீர்நிலை களையும் ஆக்கிரமித்து பலர் வீடுகளையும், வணிக நிறுவனங்களையும் கட்டி வசித்து வருகிறார்கள்.

நீர்நிலை, சாலை உள்ளிட்ட எந்தவித ஆக்கிரமிப்பாக இருந்தாலும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு முதலில் நோட்டீஸ் அனுப்ப வேண்டும். அவர்களிடம் உரிய பதில் பெற்று அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒருவேளை சம்பந்தப்பட்டவர்கள் பதில் அளிக்காவிட்டால் போலீசார் ஆக்கிரமிப்பு நிலத்தை மீட்க வேண்டும்.

ஆக்கிரமிப்பு தொடர்பாக பல சட்டங்கள் இருந்தாலும் ஆக்கிரமிப்புகள் உரிய முறையில் அகற்றப்படுவதில்லை. எனவே இது தொடர்பாக பல வழக்குகள் கோர்ட்டில் நடைபெற்று வருகின்றன.

ஐகோர்ட்டு ஆக்கிரமிப்பு களை அகற்ற தொடர்ந்து உத்தரவிட்டுள்ளது. அந்த அடிப்படையில் தமிழக அரசு, நீர்நிலை மற்றும் அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற 3 குழுக்களை அமைத்துள்ளது.

அதில் மண்டல அளவிலான குழுக்கள் ஆக்கிரமிப்புகளை கண்டறியும். மாவட்ட அளவிலான குழுக்கள் மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும். அதனை மாநில அளவிலான குழுக்கள் கண்காணிக்கும்.

இந்த நிலையில் அரசு நிலம் ஆக்கிமிரப்புகள் தொடர்பாக தமிழக அரசு புதிய வழிகாட்டுதலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக கலெக்டர்களுக்கு அனுப்ப ப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அரசு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்தவர்கள், போலி ஆவணங்கள் மூலம் அரசு நிலத்தை அபகரித்தவர்களை கண்டறிந்து அவர்கள் மீது உடனடியாக கிரிமனல் வழக்குப்பதிவு செய்ய வேண்டும். மேலும் அவர்களிடம் இருந்து அரசு நிலத்தை உடனடியாக மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது தொடர்பாக மாவட்ட கலெக்டர்கள் அரசு நிலம் ஆக்கிரமிப்பு மற்றும் மீட்டது தொடர்பாக ஒரு முறையான பதிவேட்டினை பராமரிக்க வேண்டும். அதில் அந்த நிலத்தை சர்வே எண் உள்பட அனைத்து தகவல்களையும் பதிவு செய்து கொள்ள வேண்டும். இந்த பணிகளை நிலநிர்வாக ஆணையர் கண்காணித்திட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ராமேசுவரம் கோவில் குருக்கள், பணியாளர்கள் விவகாரம்: இந்து சமய அறநிலையத்துறைக்கு நீதிமன்றம் கண்டிப்பு

சென்னை, 27 செப் 2024: ராமேசுவரம் கோவில் குருக்கள், பணியாளர்கள் விவாரத்தில் உரிய பதில் தாக்கல் செய்ய இந்து சமய அறநிலையத்துறைக்கு ஐகோர்ட் மதுரை கிளை நீதிபதி உத்தரவிட்டார்.

ராமேசுவரம் ராமநாதசுவாமி கோவிலின் குருக்கள் மற்றும் அலுவலர்கள் பணியிடங்களை நிரப்ப உத்தவிரடக்கோரி ஐகோர்ட் மதுரை கிளையில் மனுதாக்கல் செய்யப்பட்டிருந்தது. யானை ராஜேந்திரன் என்பவர் தாக்கல் செய்த பொதுநல மனுவில், கோவிலில் 12 குருக்கள், 19 உதவி குருக்கள் பணிகள் இருக்க வேண்டும். ஆனால் 2 குருக்கள், 7 உதவி குருக்கள் பணியில் உள்ளனர். ஆண்டிற்கு 100 கோடி ரூபாய் வருமானம் வரும் நிலையில், இந்து சமய அறநிலைத்துறை பராமரிப்பு பணியில் கவனம் செலுத்துவதில்லை எனக் கூறியிருந்தார்.

இந்த மனு மீதான விசாரணையின்போது நீதிமன்றம் சில உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. ராமநாதசுவாமி கோவிலுக்கு அனுமதிக்கப்பட்ட குருக்கள், அலுவலர்கள், பணியாளர்கள் எண்ணிக்கை எவ்வளவு என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். எத்தனை பேர் பணியமர்த்தப்பட்டனர். கோவிலின் ஆண்டு வருமானம் எவ்வளவு. ஊதியம், பராமிரிப்பு போக மீதம் உள்ள தொகை எவ்வளவு? எவ்வாறு செலவழிக்கப்படுகிறது? என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். இந்து அறநிலைத்துறை கோவில்களை முறையாக பராமரிப்பது இல்லை. வசூல்ராஜா வேலைகளை மட்டுமே செய்கின்றன என கண்டித்தனர்.

இது தொடர்பாக இந்து சமய அறநிலைத்துறை ஆணையர் விரிவான பதில் மனுவை தாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அத்துடன் அடுத்த மாதம் 14-ந்தேதி வழக்கு விசாரணையை ஒத்திவைத்தனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## அதிவேக உயிர்காப்பு பதில்வினைக்காக இந்தியாவின் முதல் 'இதய அதிர்ச்சி சிகிச்சை குழு'-ஐ அறிமுகம் செய்யும் வடபழனி, காவேரி மருத்துவமனை



சென்னை, 27 செப் 2024: உயர்சிகிச்சைக்கு புகழ்பெற்ற காவேரி மருத்துவமனை - வடபழனி இந்தியாவின் முதல் ஒருங்கிணைக்கப்பட்ட இதய அதிர்ச்சி சிகிச்சை குழு தொடங்கப்படும் நிகழ்வை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது; இதன் மூலம் மேம்பட்ட இதய சிகிச்சை பராமரிப்பில் ஒரு புதிய தரஅளவுகோலை இம்மருத்துவமனை நிறுவுகிறது. தீவிரமான சீர்பிறழ்வுகளை தொடர்ந்து இதயத்தம்பம்/இதய செயலிழப்பு போன்ற உயிருக்கு ஆபத்தான நிலைகளிலுள்ள நோயாளிகளுக்கு விரைவான, ஒருங்கிணைக்கப்பட்ட இடையீட்டு சிகிச்சையை வழங்குவதற்கென இக்குழு உருவாக்கப்பட்டிருக்கிறது. சிகிச்சை வழங்குவதில் ஏற்படும் தாமதம் பல நேரங்களில் உயிரிழப்பிற்கு வழிவகுக்கக்கூடும் என்பதால், இது நிகழாமல் தடுப்பதே இந்த புதுமையான நடவடிக்கைக்கான காரணமாகும். ஒரு பிரத்யேக ஹெல்ப்லைன் வழியாக இதய அதிர்ச்சி சிகிச்சை குழுவின் சேவையை அணுகிப்பெற முடியும். நோயாளிகள், நோயாளிகளை கவனித்துக் கொள்பவர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு மருத்துவமனையோடு தொடர்புக்கான ஒற்றை முனையாக இந்த ஹெல்ப்லைன் செயல்படும். பல்வேறு துறைகளை தொடர்பு கொள்வதற்கான அவசியத்தை நீக்குவதன் வழியாக உயிருக்கு ஆபத்தான முக்கியமான தருணங்களில் தாமதமின்றி உயிர் காக்கும் இடையீட்டு சிகிச்சைகள் உடனடியாக வழங்கப்படுவதை இக்குழு உறுதி செய்யும். இந்த முன்னெடுப்பின் தனித்துவமான அம்சம் என்பது, வழக்கமான மூன்றாம் நிலை சேவைகள் என்பதையும் கடந்து மிகவும் பிரத்யேகமான உயர் மருத்துவ சிகிச்சையான நான்காம் நிலை பராமரிப்பை வழங்குவதற்கான ஏற்பாடாகும். நான்காம் நிலை சிகிச்சை பராமரிப்பில் அரிதான மற்றும் சிக்கலான செயல்முறைகள் போன்ற மேம்பட்ட சிகிச்சைகள், இதய அறுவைசிகிச்சை மற்றும் இதயமாற்று சிகிச்சை போன்ற பிரிவுகளில் தனிச்சிறப்பான நிபுணத்துவம் ஆகியவை உள்ளடங்கும். காவேரி மருத்துவமனை போன்ற சிறப்பு மையங்களில் வழங்கப்படும் இத்தகைய அளவிலான பராமரிப்பு, உயிருக்கு ஆபத்தான நிலையிலுள்ள நோயாளிகளின் நிலைமையை சீராக்க மெக்கானிக்கல் சர்குலேட்டரி சப்போர்ட் (எம் சி எஸ்) சாதனங்களை ஒருங்கிணைக்கிறது மற்றும் இச்சேவையானது 24/7 அடிப்படையில் எப்போதும் கிடைக்கப்பெறுகிறது. இதய அதிர்ச்சி சிகிச்சை குழுவில் இதய சிகிச்சை மருத்துவர்கள், இதய அறுவைசிகிச்சை நிபுணர்கள், மயக்கவியல் வல்லுநர்கள் மற்றும் தீவிர சிகிச்சை மருத்துவர்கள் உட்பட பல்வேறு துறைகள் மற்றும் பிரிவுகளைச் சேர்ந்த நிபுணர்கள் இடம் பெறுகின்றனர். உயிருக்கு ஆபத்தான சூழ்நிலைகளில் சாத்தியமுள்ள மிகச்சிறந்த சிகிச்சையை உடனடியாக வழங்குவதற்கு இவர்கள் ஒருங்கிணைந்து ஒத்துழைப்புடன் இயங்குகின்றனர். சிகிச்சையளிக்கப்படாத இதய அதிர்ச்சி நிகழ்வானது உயிரிழப்பிற்கான இடர்வாய்ப்பு கணிசமாக அதிகரிக்கிறது என்பதால் இத்தகைய ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறை இன்றியமையாததாகும். இதய அதிர்ச்சி சிகிச்சை குழு தொடக்க நிகழ்விற்கு தமிழ்நாடு மாநிலத்தின் மாண்புமிகு சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சர் திரு. மா சுப்ரமணியன் தலைமை வகித்தார். ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவ கல்லூரி & ஆராய்ச்சி மையத்தின் இதய பராமரிப்பு மையத்தின் தலைவர் & இயக்குநர் பேராசிரியர் எஸ். தணிகாசலம் மற்றும் காவேரி மருத்துவமனைகள் குழுமத்தின் இணை நிறுவனர் & செயலாக்க இயக்குநர் டாக்டர். அரவிந்தன் செல்வராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக இந்நிகழ்வில் பங்கேற்றனர். இந்நிகழ்வின்போது உரையாற்றிய பேராசிரியர் எஸ். தணிகாசலம், இச்சேவையின் இன்றியமையாத முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். "இதய அதிர்ச்சி என்பது உடனடியாக ஒருங்கிணைக்கப்பட்ட சிகிச்சை பராமரிப்பு தேவைப்படும் ஒரு மருத்துவ அவசரநிலை நேர்வாகும். கால தாமதமின்றி சரியான இடையீட்டு நடவடிக்கையை மேற்கொள்வதன் வழியாக உயிருக்கு ஆபத்தான நிலையிலுள்ள பலரின் உயிர்கள் காப்பாற்றப்படுவதை காவேரி மருத்துவமனையின் இதய அதிர்ச்சி குழு உறுதி செய்யும்" என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

காவேரி மருத்துவமனைகள் குழுமத்தின் இணை நிறுவனர் & செயலாக்க இயக்குநர் டாக்டர். அரவிந்தன் செல்வராஜ் பேசுகையில், "இதய அதிர்ச்சிக்கான சிகிச்சை குழுவை அறிமுகம் செய்திருப்பதன் வழியாக இதயம் சார்ந்த அவசர நிலைகளை எதிர்கொள்ளும் உயிருக்கு ஆபத்தான நிலையிலுள்ள நோயாளிகளுக்கான சிகிச்சை மேலாண்மையை நாங்கள் மறுவரையறை செய்கிறோம். எமது பிரத்யேக ஹெல்ப்லைன், நிபுணர்களின் பராமரிப்பிற்கு உடனடி அணுகுவசதி கிடைப்பதை ஏதுவாக்கும். உரிய நேரத்திற்குள் உயிர் காக்கும் இடையீட்டு சிகிச்சைகள் நோயாளிகளுக்கு கிடைப்பதை இது உறுதி செய்யும். இதய பராமரிப்பில் புதிய தரநிலையை நிறுவும் இந்த முன்னெடுப்பு நடவடிக்கை, கார்டியாக் அரெஸ்ட் எனப்படும் இதயத்தம்ப பாதிப்பினால் ஏற்படும் உயிரிழப்பு விகிதங்களை நிச்சயமாக குறைக்கும்" என்று குறிப்பிட்டார்.

சர்வதேச அளவிலான சிறந்த நடைமுறைகளை அடித்தளமாகக் கொண்டு இயங்கும் காவேரி மருத்துவமனையின் இதய அதிர்ச்சி சிகிச்சை குழு மாதிரி, எக்மோ, இம்பெல்லா மற்றும் எல் வி ஏ டி சாதனங்கள் போன்ற பொறியியல் சார்ந்த இரத்த சுழற்சி ஆதரவு சாதனங்கள் தேவைப்படும் நோயாளிகளின் சிக்கலான பாதிப்புகளை கையாள்வதற்கு மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் தனிச்சிறப்பான திறன்களை ஒருங்கிணைக்கிறது. இத்தகைய இடையீட்டு நடவடிக்கைகள், இதயமாற்று சிகிச்சை போன்ற செயல்முறைகளுக்கு நோயாளிகளை தயார் செய்கிற அல்லது அதற்கு பிறகு அவர்கள் மீண்டு இயல்பு நிலைக்கு வருவதற்கு ஆதரவளிக்கின்றன. யுஎஸ்ஏ-ல் நேஷனல் கார்டியோஜெனிக் ஷாக் இனிஷியேட்டிவ் (என் எஸ் சி ஐ) என்ற திட்டத்தின் வெற்றியால் உத்வேகம் பெற்றிருக்கும் காவேரி மருத்துவமனை வடபழனி, இந்தியாவில் இவ்வகையினத்தில் முதன் முறையாக இதய அதிர்ச்சி சிகிச்சை குழுவை நிறுவியிருக்கிறது. சர்வதேச நெறிமுறைகளின் அடிப்படையில் இதய இரத்தநாள அறுவைசிகிச்சை நிபுணர், இதயவியல் மருத்துவர் மற்றும் இதயவியல் சார்ந்த மயக்கவியல் நிபுணர் உட்பட குறைந்தபட்சம் மூன்று மருத்துவர்களை உள்ளடக்கியதாக இக்குழு இயங்கும். அத்துடன் எகோகார்டியோகிராஃபி மற்றும் உறுப்பு வழி செலுத்தலில் பயிற்சி பெற்ற மருத்துவர் உதவியாளரின் ஆதரவும் இக்குழுவிற்கு இருக்கும். இதய அதிர்ச்சி எச்சரிக்கை நெறிமுறையின் கீழ் காவேரி குழுமத்தைச் சேர்ந்த மருத்துவமனைகள் மற்றும் பரிந்துரைப்பு செய்யும் பிற மருத்துவ மையங்களின் அவசரநிலை சிகிச்சை குழுக்களோடு நெருங்கிய ஒருங்கிணைப்புடன் இதய அதிர்ச்சி சிகிச்சை குழுவினர் செயல்படுவார்கள். இதய அதிர்ச்சி எச்சரிக்கை கிடைக்கப்பெற்றவுடன் நோயாளியின் முதன்மை இதயவியல் நிபுணர் உட்பட அனைத்து நிபுணர்களும், ஒரு பிரத்யேக ஆன்லைன் குழுவின் வழியாக ஒத்துழைப்புடன் ஒருங்கிணைந்து செயல்படுவார்கள். நோயாளியின் சிகிச்சை காலம் முழுவதிலும் மற்றும் அவர் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்படும் வரை நிகழ்நேர தகவல் பரிமாற்றம் மற்றும் முடிவெடுத்தல் ஆகியவற்றை இக்குழுவினர் உறுதி செய்வார்கள். ஒரு பிரத்யேக மருத்துவர், நோயாளியின் சிகிச்சையை வழிநடத்துவார்; பரிந்துரைப்பு மையத்தில் அல்லது காவேரி வடபழனியில் புதிதாக நிறுவப்பட்டுள்ள இதய அதிர்ச்சி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக மாற்றுவது மற்றும் எம் சி எஸ் பொருத்துதல் உட்பட அதிக பயனளிக்கும் இடையீட்டு நடவடிக்கைகளை தீர்மானிக்க இதய அதிர்ச்சி சிகிச்சை குழுவினரோடு நெருக்கமாக அவர் செயலாற்றுவார். அவசரநிலை மருத்துவச் சேவைகள் வழங்குவதில் காவேரி மருத்துவமனை தொடர்ந்து முன்னணியில் இருந்து வருகிறது; நோயாளிகளுக்கான சிகிச்சை விளைவுகளில் உயர் தரநிலையை நிறுவுவதற்காக மேம்பட்ட பராமரிப்பு மாடல்களையும் மற்றும் உயிர் காக்கும் தொழில்நுட்பங்களையும் தொடர்ந்து இம்மருத்துவமனை அறிமுகம் செய்து வருகிறது.

## இந்தியாவிலும் மற்றும் சார்க் பிராந்தியத்திலும் தனது 1000வது ஸ்டோரை பாஸ்கின்-ராபின்ஸ் திறப்பதன் மூலம், ப்ராண்ட் மீதான இந்தியாவின் அபிமானம் அதிகரிக்கிறது



சென்னை, 27 செப் 2024: பாஸ்கின்-ராபின்ஸ், பிரமாண்டமான அமெரிக்க ஐஸ்கிரீம் பிராண்ட் மற்றும் இந்தியாவிலும் உலகிலும் மிகப்பெரிய கியூ எஸ் ஆர் ஐஸ்கிரீம் சங்கிலித் தொடர் நிறுவனமான பாஸ்கின்-ராபின்ஸ், மும்பையின் துடிப்பான புறநகர் பகுதியான அந்தேரியில் அதன் 1000வது ஸ்டோர் இன் பிரமாண்டமான அறிமுகத்தை பெருமையுடன் அறிவிக்கிறது. இந்திய மற்றும் சார்க் பிராந்திய நுகர்வோரை மகிழ்விக்கும் அதன் மூன்று தசாப்த கால நீண்ட பயணத்தில் இந்த குறிப்பிடத்தக்க சாதனை ஒரு புதிய சகாப்தத்தை குறிக்கிறது.

750 க்கும் அதிகமான சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள இந்த புதிய அந்தேரி அவுட்லெட் அதன் வாடிக்கையாளர்களுக்கு பிரீமியம், புதுமையான இனிப்பு அனுபவங்களை வழங்குவதற்கான பிராண்டின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை அடையாளப்படுத்துகின்ற, மும்பையில் உள்ள மிகப்பெரிய பாஸ்கின்-ராபின்ஸ் ஸ்டோர் ஆகும், மேலும் இது நாட்டிலேயே மிகப்பெரியவற்றினுள் அடங்குகிறது. முக்கிய பங்குதாரர்கள், தொழில்துறை தலைவர்கள் மற்றும் பிராண்ட் விசுவாசிகள் கலந்துகொண்ட இந்த மாபெரும் தொடக்க நிகழ்வு, இந்தியா மற்றும் சார்க் பிராந்தியத்தில் பாஸ்கின்-ராபின்ஸ் நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க வளர்ச்சி வரலாற்றின் ஒரு கொண்டாட்டமாக இருந்தது.

1993 ஆம் ஆண்டு இந்தியா மற்றும் சார்க் பிராந்தியத்தில் பாஸ்கின்-ராபின்ஸ் இன் முதன்மை உரிமையாளரான கிராவிஸ் ஃபுட்ஸ் நிறுவனத்தின் மூலம் இந்திய சந்தையில் நுழைந்ததில் இருந்து பாஸ்கின்-ராபின்ஸ், திருப்தி மற்றும் தரத்திற்கு ஒத்ததாக தொடர்புடைய வீட்டுப் பெயராக அதை அமைக்கின்ற வகையில் இந்திய நுகர்வோரின் தனிப்பட்ட விருப்பங்களுக்குத் தொடர்ந்து மாற்றியமைத்துள்ளது. 1000வது ஸ்டோர் இன் இந்த திறப்பு, தரமான மூலப் பொருட்களைப் பயன்படுத்துதல் மற்றும் பல்வேறு சுவைகளை வழங்குதல் ஆகியவற்றில் பிராண்டின் வெற்றிகரமான உத்திக்கு ஒரு சான்றாக இருக்கிறது, இது பெருநகர மையங்கள் உட்பட 290 க்கும் அதிகமான நகரங்கள் அத்துடன் பிரபலமான சுற்றுலா மற்றும் வளர்ந்து வரும் மெட்ரோ அல்லாத சந்தைகள் ஆகியவற்றில் அதன் விரிவாக்கத்தைத் தூண்டியுள்ளது, மேலும் இது பாஸ்கின்-ராபின்ஸ் நிறுவனத்தின் மிகப்பெரிய உலகளாவிய சந்தைகளில் ஒன்றாக மாறியது. இந்தியாவிலும் சார்க் பிராந்தியத்திலும் பாஸ்கின்-ராபின்ஸ் நிறுவனத்தின் பயணம், புதிய சுவைகள் மற்றும் வடிவங்களை அறிமுகப்படுத்துவது முதல் பெரிய இடங்கள், கியோஸ்க்குகள் மற்றும் நவீன வர்த்தக சேனல்கள் ஆகியவற்றின் மூலம் அதன் சில்லறை வர்த்தகத்தின் இருப்பை விரிவுபடுத்துவது வரை தொடர்ச்சியான கண்டுபிடிப்புகளால் வகைப்படுத்தப்படுகிறது. இப்பகுதியில் ஐஸ்கிரீம் கேக்குகள், ஐஸ்கிரீம் பீஸ்ஸாக்கள் மற்றும் எளிதான சிற்றுண்டிக்காக கடி-அளவிலான ஐஸ்கிரீம் ட்ரீட்களான ஐஸ்கிரீம் "ராக்ஸ்" ஐ வழங்கிய முதல் பிராண்டுகளில் இதுவும் ஒன்றாகும்.

உள்ளூர் சந்தை நிலவரங்கள் மற்றும் நுகர்வோர் விருப்பங்களுக்கு ஏற்ப மாற்றியமைக்கும் இந்த பிராண்டின் திறன் ஆனது, இந்தியாவிலும் சார்க் பிராந்தியத்திலும் செயல்படும் ஒரு சர்வதேச பிராண்டாக மட்டுமல்லாமல், நுகர்வோர் அனுபவத்தின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகவும் ஆக்குகின்ற அதன் வெற்றியில் முக்கிய பங்கு வகிக்கிறது. பாஸ்கின்-ராபின்ஸ் அதன் பிரபலமான தனித்துவமான சுவைகளான மிசிசிப்பி மட், ஹனி நட் க்ரஞ்ச் மற்றும் பவேரியன் சாக்லேட் போன்றவற்றை வழங்குகிறது, மேலும் குலாப்ஜாமூன், கேரமல் மில்க்கேக் மற்றும் ரப்டி ஜலேபி போன்ற உள்ளூர் இனிப்பு வகைகளிலிருந்து வரும் மெனு வகைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. கூடுதலாக, பல ஆண்டுகளுக்கு முன்பே ஆன்லைனில் ஆர்டர் செய்வதை தீவிரமாக செயல்படுத்திய நாட்டின் முதல் ஐஸ்கிரீம் வணிகங்களில் இதுவும் ஒன்றாகும், மேலும் அதன் வாடிக்கையாளர் தளத்திற்கான ஒரு லாயல்டி திட்டத்தைக் கொண்ட முதல் நிறுவனமாகும்.

"இந்தியாவில் மற்றும் சார்க் பிராந்தியத்தில், பாஸ்கின்-ராபின்ஸ் நிறுவனத்தின் முதன்மை உரிமையாளரான கிராவிஸ் ஃபுட்ஸ், இன்ஸ்பயர் பிராண்ட்ஸ் உடன் இணைந்து, பாஸ்கின்-ராபின்ஸ் இன் 1,000வது ஸ்டோர் ஐ இப்பகுதியில் அறிமுகப்படுத்தியதைக் கொண்டாட நாங்கள் ஒன்றிணைந்துள்ளதால், எங்களுக்கு இது ஒரு உற்சாகமான நாளாக இருக்கிறது." என்று கிராவிஸ் குழுமத்தின் தலைவர் திரு. கௌரவ் காய் குறிப்பிட்டார். "இந்த மைல்கல் இந்த சந்தையில் எங்களின் பகிரப்பட்ட மதிப்புகள், ஆழ்ந்த அர்ப்பணிப்பு மற்றும் விதிவிலக்கான செயல்பாடு ஆகியவற்றை பிரதிபலிக்கிறது."

"இந்தியாவில் எங்களது 1000வது ஸ்டோர் ஐத் திறக்கும் இந்த முக்கியமான நிகழ்வைக் கொண்டாடுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்" என்று இன்ஸ்பயர் பிராண்ட்ஸ் இன் இன்டர்நேஷனல் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் மைக்கேல் ஹேலி கூறினார். "30 ஆண்டுகளுக்கும் மேலாக பிராந்தியத்தில் ஒரு வலுவான உரிமையாளராக இருக்கின்ற கிராவிஸ் ஃபுட்ஸ் நிறுவனத்திற்கு நாங்கள் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம், மேலும் இந்த சாதனையை அடைந்ததற்காக அவர்களுக்கும், இன்ஸ்பயர் நிறுவனத்தின் சர்வதேச அணிக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம். இங்கு பாஸ்கின்-ராபின்ஸ் இன் வெற்றியானது, இந்திய சுவைக்கு ஏற்ற வகையில் விதிவிலக்கான மற்றும் புதுமையான அனுபவங்களை வழங்குவதற்கான எங்களின் உறுதிப்பாட்டின் ஒரு பிரதிபலிப்பாகும். ஷிஷிஸி சந்தையில் ஒரு முன்னணியாளராக இருப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம், மேலும் இந்த துடிப்பான சந்தையில் எங்கள் இருப்பை மேலும் விரிவுபடுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

"உலகின் முன்னணி பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியா தொடர்ந்து மேல்நோக்கி முன்னேறி வரும் நிலையில், பாஸ்கின்-ராபின்ஸ் பொருளாதாரத்திற்கு பங்களிக்கின்றது, வேலைகளை உருவாக்குகின்றது மற்றும் எங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளில் தொடர்ச்சியான கண்டுபிடிப்புகள் மூலம் நுகர்வோருக்கு மகிழ்ச்சியை வழங்குகின்ற இந்த பயணத்தின் ஒரு பகுதியாக இருக்க உறுதிபூண்டுள்ளது என்று கிராவிஸ் ஃபுட்ஸ் இன் நிர்வாக இயக்குனர் விக்ரம் சேத் மேலும் கூறினார்.

வளர்ந்து வரும் தேவையை எதிர்கொள்ள, இந்த கிராவிஸ் குழுமம் சமீபத்தில் இந்தியாவில் பாஸ்கின்-ராபின்ஸ் நிறுவனத்திற்கான ஒரு புதிய உற்பத்தி ஆலையை அமைத்தது. இந்தியா மற்றும் சார்க் பிராந்தியத்தில் 1,000 வது இருப்பிட சாதனையைக் கொண்டு, வரும் ஆண்டுகளில் இது தொடர்ச்சியான கண்டுபிடிப்புகள், மூலோபாய விரிவாக்கம் மற்றும் வளர்ந்து வரும் இந்திய சந்தையின் ஒரு ஆழமான புரிதலால் உந்தப்பட்டு இந்த நிறுவனம் இன்னும் பெரிய வளர்ச்சிக்கு தயாராக உள்ளது.

தமிழ் குரல் மக்கள்
tamilmakkalkural@gmail.com RNI No. - TNTAM24940
உள்ளது உள்ளபடி
வெள்ளி, செப்டம்பர் 27, 2024

# செர்வோடெக் பவர் சிஸ்டம்ஸ் லிமிடெட்-ன் புரொமோட்டருக்கு மாற்றத்தக்க வாரண்டுகள் ஒதுக்கீடு திட்டத்திற்கு அதன் இயக்குநர்கள் குழு ஒப்புதல்

சென்னை, 27 செப் 2024: மின்வாகனங்களுக்கான சார்ஜர் தயாரிப்பில் இந்தியாவின் மிகப்பெரிய நிறுவனமான செர்வோடெக் பவர் சிஸ்டம்ஸ் லிமிடெட், ஒரு ஈக்விட்டி பங்கிற்கு ரூ. 167.40 என்ற விலையில் 58,50,000 மாற்றத்தக்க வாரண்டுகளை நிறுவனத்தின் புரொமோட்டர் சரிகா பாட்டியாவிற்கு ஒதுக்கீடு செய்யும் திட்டத்திற்கு 2024 செப்டம்பர் 23 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறது. ரூ. 97.93 கோடி என்ற மொத்த தொகைக்கு இந்த மாற்றத்தக்க வாரண்டுகளின் வெளியீடு மேற்கொள்ளப்படுகிறது.

சமீபத்தில், கர்நாடகாவின் பெங்களூரு எல்க்ட்ரிசிட்டி சப்ளை கம்பெனி லிமிடெட் (பெஸ்காம்) நிறுவனத்திடமிருந்து 11 டிசி அதிவேக மின்வாகன சார்ஜிங் நிலையங்களை நிறுவுவதற்கான ஒரு பெரிய ஆர்டரை செர்வோடெக் பெற்றிருக்கிறது. கர்நாடகாவெங்கும் 11 பிராந்திய போக்குவரத்து அலுவலக (ஆர்டிஓ) வளாகங்களில் பொது மின்வாகன சார்ஜிங் நிலையங்களை இவ்வொப்பந்தத்தின் கீழ் செர்வோடெக் நிறுவும். கர்நாடகாவின் பல்வேறு பிராந்தியங்களில் தங்களது மின்வாகனங்களுக்கு சார்ஜிங் செய்வதை அவ்வாகனங்களின் உரிமையாளர்களுக்கு சவுகரியமானதாக ஆக்கும் விதத்தில் சார்ஜிங் கட்டமைப்பை இச்செயல்திட்டம் கணிசமாக மேம்படுத்தும். திட்டமிடல் மற்றும் வடிவமைப்பிலிருந்து சார்ஜிங் நிலையங்களை நிறுவி செயல்பாட்டிற்கு கொண்டு வரும் வரை ஒட்டுமொத்த திட்ட செயலாக்கத்தையும் செர்வோடெக் நிர்வகிக்கும். ஒவ்வொரு ஆர்டிஓ வளாக அமைவிடத்திலும் சரியான இடத்தில் இடஅமர்வு செய்வது மற்றும் செயல்திறனை உறுதி செய்யும் வகையில் ஈவி சார்ஜிங் நிலையங்களை நிறுவுவதற்கான விரிவான திட்டத்தை உருவாக்குவது இதில் உள்ளடங்கும். கண்டிப்பான பாதுகாப்பு மற்றும் செயல்திறன் தரநிலைகளை பூர்த்தி செய்யும் வகையில் உயர்தர சார்ஜிங் நிலையங்கள் செர்வோடெக்-ஆல் தயாரிக்கப்படும், பரிசோதிக்கப்படும் மற்றும் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு நிறுவப்படும். கூடுதலாக, தேவைப்படும் அனைத்து மின் இணைப்புகள் மற்றும் பவர் சப்ளை ஏற்பாடுகளை கையாள்வதோடு வாரண்டி ஆதரவையும் செர்வோடெக் வழங்கும். இதற்கு முன்னதாக, மின்சார துறையில் இயங்கும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப முகமைக்கு (அனர்ட்) 12 ஈவி சார்ஜிங் நிலையங்களை நிறுவுவதற்கான ஒரு பெரிய ஒப்பந்தத்தை இந்நிறுவனம் பெற்றிருந்தது. இவ்வொப்பந்தத்தின்கீழ் கேரளா மோட்டார் வாகனத்துறையில் செயல்படும் பல்வேறு அமைவிடங்களில் 30கிவா துரித டிசி ஈவி சார்ஜர்கள் போன்ற 12 மின்வாகன சார்ஜிங் நிலையங்களை செர்வோடெக் நிறுவ வேண்டும். மின்வாகன சார்ஜிங் நிலையங்களை கட்டித்தருவது, அதற்கான சாதனங்களை வழங்குவது மற்றும் அவற்றை செயல்பாட்டிற்கு கொண்டுவருவது ஆகிய பணிகள் இவ்வொப்பந்தத்தின் கீழ் உள்ளடங்கும்.

# டாடா.ஈவி அதன் ஈவிகளுக்கான அற்புதமான விலைகளுடன் கொண்டாடும் 'கார்கள் திருவிழா'




சேலம், 27 செப் 2024: இந்தியாவின் எலக்ட்ரிக் மொபிலிட்டி புரட்சியின் முன்னோடியான டாடா.ஈவி, அதன் 'கார்களின் திருவிழா' கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, அதன் அதிகம் விற்பனையாகும் மாடல்களான டியாகோ.ஈவி, பன்ச்.ஈவி மற்றும் நெக்சான்.ஈவி ஆகியவற்றில் இதுவரை இல்லாத விலைகளை அறிவித்துள்ளது. வெகுஜன வாடிக்கையாளர்களுக்கு ஈவிகளை அணுகக்கூடியதாக மாற்றுவதில் கவனம் செலுத்துவதால், நெக்சான்.ஈவிக்கு ரூ. 3 லட்சம் வரையிலும், பன்ச்.ஈவிக்கு ரூ. 1.20 லட்சம் வரையிலும் விலை குறைக்கப்பட்டுள்ளது.

டாடா.ஈவி ஆனது உள்ளூர்மயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகளின் பலன்களை வாடிக்கையாளர்களுக்கு அளித்து வருகிறது, மேலும் கடந்த மாதம் தொடங்கப்பட்ட கர்வ்.ஈவி உடன் ஐசிஈ விலையை சமமாக கொண்டு வர முடிந்தது. இந்தச் சிறப்புச் சலுகையின் மூலம், டாடா.ஈவி ஆனது ஐசிஈ மாடல்களுக்கு இணையாக அதிகம் விற்பனையாகும் நெக்சான்.ஈவி இன் விலைகளையும் குறிப்பிட்ட காலத்திற்குக் கொண்டு வருகிறது. கூடுதலாக, பன்ச்.ஈவி மற்றும் டியாகோ.ஈவி இல் பண்டிகைக்கால சலுகைகள் அவற்றின் விலைகளை அவற்றின் ஐசிஈ சகாக்களுக்கு நெருக்கமாக கொண்டு வந்துள்ளன. இந்த தவிர்க்கமுடியாத விலைகளைத் தவிர, வாடிக்கையாளர்கள் மிகக் குறைந்த இயங்கும் செலவுகள், அமைதியான மற்றும் எளிதான இயக்கிகள் மற்றும் மேலே உள்ள இரண்டு பிரிவுகளின் அம்சங்களை அனுபவிக்கலாம்.

வாடிக்கையாளர்கள் நாடு முழுவதும் உள்ள 5,500க்கும் மேற்பட்ட டாடா பவர் சார்ஜிங் பாயின்ட்களில் 6 மாத இலவச கட்டணமில்லா சார்ஜிங்கை அனுபவிக்க முடியும், இது நகரங்களுக்கு இடையேயான மற்றும் நகரங்களுக்குள் மேற்கொள்ளப்படும் பயணங்களை சிரமமற்றதாகவும் மற்றும் செலவு இல்லாததாக மாற்றுகிறது. வாடிக்கையாளர்கள் தங்களுக்குப் பிடித்தமான ஈவியை சிறந்த விலையில் முன்பதிவு செய்து வீட்டிற்கு ஓட்டுவதற்கு ஏற்ற நேரம் இது, ஏனெனில் இந்த சிறப்பு, பண்டிகை ஆஃபர் 31 அக்டோபர் 2024 வரை குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே கிடைக்கும்.

இதற்கு முன் அறிவித்திராத இத்தகைய கொண்டாட்டத்தை அறிவித்த, டாடா பாசஞ்சர் எலக்ட்ரிக் மொபிலிட்டி லிமிடெட் தலைமை வணிக அதிகாரி திரு விவேக் ஸ்ரீவத்சா அவர்கள், "டாடா.ஈவி இல் உள்ள எங்களின் ஒரே நோக்கம், தடைகளை உடைத்து, வழக்கமான கார் வாங்குபவர்களுக்கு ஈவிகளை இன்னும் அணுகக்கூடியதாக மாற்றுவதன் மூலம், ஈவிகளை வெகுஜனங்களுக்கு வழங்குவதே ஆகும். இந்த சிறப்பு, வரையறுக்கப்பட்ட கால விலைகள் மூலம், ஈவி களுக்கான அதிக வாங்குதல் செலவுத் தடையை நாங்கள் உடைத்து, ஈவி விலைகளை ஒத்த பெட்ரோல் மற்றும்/அல்லது டீசலில் இயங்கும் வாகனங்களுக்கு நெருக்கமாக கொண்டு வருகிறோம். எங்கள் புதிய யுகம், உயர் செயல்திறன், ஜீரோ-உமிழ்வு மற்றும் ஜீரோ சத்தம் இல்லாத ஈவிகளை அனுபவிக்கத் தொடங்க வாடிக்கையாளர்கள் இப்போது சரியான வாய்ப்பைப் பெற்றுள்ளனர், இது குறைந்த இயங்கும் செலவுகள் மற்றும் அதிக ஓட்டுநர் வசதியையும் வழங்குகிறது. டாடா பவர் சார்ஜர்களில் இலவச பொது சார்ஜிங் சலுகையிலிருந்து வாடிக்கையாளர்கள் கூடுதலாகப் பயனடைவார்கள். ஈவி புரட்சியில் இணையும் வாடிக்கையாளர்களை அவர்களின் அருகிலுள்ள டாடா மோட்டார்ஸ் மற்றும் டாடா.ஈவி ஷோரூம்களில் வரவேற்பதற்கு நாங்கள் எதிர்நோக்குகிறோம்" என்று கூறினார்.

# தமிழகத்தில் 3 நாட்களுக்கு கனமழை எச்சரிக்கை சென்னையில் கொட்டித் தீர்த்த கனமழை: அம்பத்தூரில் 13 செ.மீ.

சென்னை, 27 செப் 2024: சென்னையில் நேற்று இரவு பலத்த காற்றுடன் கனமழை பெய்தது. அதிகபட்சமாக அம்பத்தூரில் 13 செ.மீ. மழை பதிவானது.

சென்னையில் கடந்த சில நாட்களாக கடும் வெயில் வாட்டி வந்தது. அவ்வப்போது லேசான மழை பெய்தாலும் வெப்பத்தின் தாக்கம் குறையாமல் இருந்தது.

இந்நிலையில் நேற்று காலை முதல் கடும் வெயில் வாட்டியது. பின்னர் மாலையில் லேசான சாரல் மழையாக தொடங்கி இரவில் பலத்த காற்றுடன் கனமழையாக கொட்டித் தீர்த்தது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் தொடர் மழையால் பல பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. சாலைகளில் வெள்ள நீர் தேங்கியதால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. கோயம்பேடு சந்தை, அண்ணாநகர் உள்ளிட்ட இடங்களில் உள்ள சாலைகளில் மழைநீர் தேங்கியது. இதனால் வாகன ஓட்டிகள் கடும் அவதிக்குள்ளாயினர்.

சென்னை புறநகர் பகுதிகளில் பெய்த மழையில் 35 விமானங்களின் சேவை பாதிக்கப்பட்டுள்ளது. டெல்லி, மும்பை, பெங்களூருவில் இருந்து வந்த 12 விமானங்கள் தரையிறங்க மிகவும் தாமதமானால் திருச்சி சென்னை விமானம் பெங்களூருவுக்கு திருப்பிவிடப்பட்டது. இதனால் பயணிகள் கடும் அவதிக்கு உள்ளாகினர்.

அம்பத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் சாலையில் மரங்கள் சாய்ந்து போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டது. பின்னர் மாநகராட்சி பணியாளர்கள் வந்து, மரத்தை வெட்டி அகற்றினர்.

சென்னையில் உள்ள பெரும்பாலான சுரங்கப் பாதைகளில் மழைநீர் தேங்கியது. எனினும் நள்ளிரவில் போக்குவரத்து குறைவாக இருந்ததால், பெரிய அளவில் பாதிப்பு ஏற்படவில்லை. பின்னர் மாநகராட்சி நடவடிக்கையால் இன்று காலை அனைத்து சுரங்கப் பாதைகளிலும் மழைநீர் வெளியேற்றப்பட்டு, வழக்கமான போக்குவரத்து இருந்தது.

நேற்று பெய்த கனமழையால் கொளத்தூர், ஆர்.கே.நகர், சூளை, வியாசர்பாடி பக்தவத்சலம் காலனி உள்ளிட்ட குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் சூழ்ந்தது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்று தென் தமிழகம் மற்றும் வட தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் மிதமான மழை பெய்யக்கூடும்.

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி சேலம் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

நாளை தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளை மறுநாள் தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியில் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோவை, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், கரூர், திருச்சி, நீலகிரி, திருப்பூர், ஈரோடு, தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

29 ந்தேதி தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி, திண்டுக்கல், திருப்பூர், மதுரை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு விவரம் வருமாறு: அம்பத்தூர், ஆவடி, வானகரம் தலா 13 செ.மீ., திருவாலங்காடு, மணலி தலா 10 செ.மீ., திரு.வி.க.நகர், ஜெயா பொறியியல் கல்லூரி, கத்திவாக்கம், அயனாவரம், அண்ணாநகர், வில்லிவாக்கம் தலா 9 செ.மீ., கொளத்தூர், கோடம்பாக்கம், புழல் தலா 8 செ.மீ. மழை பதிவாகி உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கச்சத்தீவு அருகே ஆழ்கடல் பகுதியில் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்: துப்பாக்கியால் சுட்டு மிரட்டல்

சென்னை, 27 செப் 2024: தமிழக மீனவர்களை நோக்கி இலங்கை கடற்படை துப்பாக்கி சூடு நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது?

கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் விரட்டியடித்து தாக்கப்படுவதும் படகுடன் மீனவர்கள் கைது செய்து சிறையில் அடைக்கப்படும் சம்பவங்களும் கடந்த சில மாதங்களாகவே அதிகமாக நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், ராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க சுமார் 300-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்கு சென்றனர். கச்சத்தீவு அருகே ஆழ்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களின் படகுகளில் ஏறி அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மேலும் படகுகளில் இருந்த மீன்பிடி சாதனங்களையும் தாக்கி சேதப்படுத்தியுள்ளனர். மேலும் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு மீனவர்களை விரட்டியடித்துள்ளனர். இதனால் அச்சமடைந்த மீனவர்கள் விரைந்து கரைக்கு திரும்பினர். இதுவரை இல்லாத அளவிற்கு அதிகப்படியான ரோந்து கப்பலில் இலங்கை கடற்படை வந்ததாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை கடற்படையின் இந்த அட்டூழியத்தால் ஒரு படகிற்கு 50 ஆயிரம் முதல் 70 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் தமிழக மீனவர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. மேலும் இலங்கை கடற்படையினரின் இந்த நடவடிக்கைக்கு மத்திய மாநில அரசுகள் நிரந்தர தீர்வு காண வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# உன் தியாகம் பெரிது; உறுதி அதனினும் பெரிது செந்தில் பாலாஜியை வருக, வருக என ஸ்டாலின் வரவேற்பு



சென்னை, 27 செப் 2024: செந்தில் பாலாஜியை வருக வருக என வரவேற்பதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

செந்தில் பாலாஜியின் ஜாமீன் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவில் கூறியிருப்பதாவது:

ஆருயிர் சகோதரர் செந்தில் பாலாஜிக்கு 471 நாட்களுக்குப் பிறகு, உச்ச நீதிமன்றத்தால் பிணை கிடைத்திருக்கிறது.

அமலாக்கத் துறையானது, அரசியல் எதிரிகளை ஒடுக்கும் துறையாக மாற்றப்பட்ட தற்போதைய சூழலில், அதற்கு உச்சநீதிமன்றம் ஒன்றே விடியலாக இருக்கிறது. எமர்ஜென்சி காலத்தில் கூட இவ்வளவு நாட்கள் சிறை வாழ்க்கை கிடையாது. அரசியல் சதிச் செயல்கள் 15 மாதங்கள் தொடர்ந்தன. கைது செய்து சிறையிலேயே வைத்துவிடுவதால் சகோதரர் செந்தில் பாலாஜியின் உறுதியைக் குலைக்க நினைத்தார்கள்.

முன்னிலும் உரம் பெற்றவராய்ச் சிறையில் இருந்து வெளியில் வரும் சகோதரர் செந்தில் பாலாஜியை வருக வருக என வரவேற்கிறேன். உன் தியாகம் பெரிது! உறுதி அதனினும் பெரிது! இவ்வாறு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.